## சுருக்கம்

ஈரோடு மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண்.51** 5713 4855/10 **நாள்:17.03.2010.**

**படிக்கப்பட்டன:**

1. அரசாணை (பத்தாண்டு) எண்.123, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் **18.3.2008.**
2. நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம். ந..க.எண்.**51452/2004**/எம்.3, நாள் **8.8.2009** மற்றும் **13.1.2010.**

---

**ஆணை:–**

ஈரோடு நகராட்சி, அதன் அப்போதைய எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி, அப்படியே, அதாவது, **48** வார்டுகளுடன் ஈரோடு மாநகராட்சியாக அமைக்கப்பட்டு, **1.1.2008** முதல் ஈரோடு மாநகராட்சி செயல்படத் துவங்கியுள்ளது.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், திருப்பூர் மற்றும் ஈரோடு மாநகராட்சிகளுடன் முறையே இணைக்கப்பட கருதப்பட்டுள்ள பகுதிகளை உள்ளடக்கிய அவ்விரு மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் மற்றும் தொடர்புடைய அனைத்து பணிகள் குறித்தான அறிக்கைகளை, தொடர்புடைய சட்டப்பிரிவுகள், விதிகள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றி அரசுக்கு அளிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இவ்வாணைகளின் அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி.ப.மகேஸ்வரி, சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டதாக குறிப்பிட்டு, சிறப்பு அதிகாரியின் அறிக்கையை அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

4. சிறப்பு அதிகாரி தமது அறிக்கையில், ஈரோடு மாநகராட்சியுடன் காசிபாளையம், சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், பெரியசேமூர் ஆகிய நான்கு மூன்றாம் நிலை நகராட்சிகள், பிராமண பெரிய அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, திண்டல், முத்தம்பாளையம் (ஈரோடு மாநகராட்சியுடன் இணைக்கப்படுவதற்கு சம்மதம் தெரிவித்து இவ்வுள்ளாட்சி அமைப்புகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன), **46** புதூர், லக்காபுரம் ஆகிய ஏழு ஊராட்சிகள் ஆகியவற்றை இணைக்க அரசு பரிசீலக்கலாம் என தெரிவித்துள்ளார்.

5. ஈரோடு மாநகராட்சிக்கான சிறப்பு அதிகாரியின் அறிக்கை குறித்து தொடர்புடைய அதிகாரிகளுடன் விரிவான விவாதம் மற்றும், கவனமான பரிசீலனைக்குப் பின்னர், அரசு, ஈரோடு மாநகராட்சியுடன், காசிபாளையம், சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், பெரியசேமூர் ஆகிய நான்கு மூன்றாம்நிலை நகராட்சிகள், பிராமண பெரிய அக்ரஹாரம், சூரியம்பாளையம் ஆகிய இரண்டு பேரூராட்சிகள், கங்காபுரம், எல்லப்பாளையம், வில்லரசம்பட்டி, திண்டல், முத்தம்பாளையம் ஆகிய ஐந்து ஊராட்சிகள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

6. விரிவாக்கப்படவுள்ள மாநகராட்சிப் பகுதிக்கான வார்டுகள் அமைத்தல், மண்டலங்கள் பிரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள தேவைப்படும் போதிய கால அவகாசம் மற்றும் ஈரோடு மாநகராட்சி, அதனுடன் இணைக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்புகள் பாதிக்கப்படக் கூடாது என்பவற்றை கருத்தில் கொண்டு, தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தற்போதைய உள்ளாட்சி பிரதிநிதிகளின் பதவிக் காலம் 2011–ஆம் ஆண்டு முடிவடைந்தவுடன் விரிவுப்படுத்தப்பட்ட ஈரோடு மாநகராட்சி அமைக்கப்படலாம் எனவும் அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

7. இவ்வாணைகளின் அடிப்படையில், தேவையான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

நிரஞ்சன் மார்டி
அரசு செயலாளர்

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை 600 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர்,
பனகல் கட்டடம், சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
மாவட்ட ஆட்சித் தலைவர், ஈரோடு.
ஆணையர், ஈரோடு மாநகராட்சி.
தொடர்புடைய மூன்றாம் நிலை நகராட்சி செயல் அலுவலர்கள்.
(நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்.
(பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வழியாக)

நகல்:–
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.6, ந.நி.5, பேரூ.2,அ.ந.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

சி.நாராயணி 17/03/2010.
பிரிவு அலுவலர்.
17/3